1979 நவம்பர் 8]

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, உயர்நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாக கனம் அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். உயர்நீதிமன்றத்திற்கு அரசு போய் இருக்கிறதா? அல்லது மால்கோ நிறுவனம் போய் இருக்கிறதா? இது எத்தனை வருட காலமாக உயர்நீதிமன்றத்தில் இருக்கிறது? 9 கோடிக்கு மேல் நமக்குச் சேரவேண்டியதிருக்கும் போது அதை பைசல் செய்தால்தான் நாங்கள் வாங்கிக் கொடுக்க முடியுமென்று அந்த அளவிற்குப் பேசியிருந்தால் அவர்கள் கொடுத்திருப்பார்கள் அல்லவா? அதே போல. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று துணைக் கேள்விகள் ஆகிவிட்டன. அதோடு நிறுத்துங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஆகவே வேண்டுமென்றே அரசு அவர்களுக்குத் தொடர்ந்து சலுகை காட்டி வந்திருக்கிறார்கள் என்பதுதானே பொருள்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அவர்கள் அந்த நிலுவையைக் கொடுக்காத காரணத்தால் மின் துண்டிப்பு செய்யப்பட்டது. மின் துண்டிப்பு செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டது. அந்த உத்தரவை எதிர்த்து, அந்த நிலுவைகளை சுலப தவணைகளில் வசூல் செய்வது இவைகள் குறித்தெல்லாம் "மால்கோ" நிறுவனம் தான் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நாம் செல்ல வேண்டிய அவசியமே இல்லை.

பொதிகை மலையில் தண்ணீர்த்தொட்டிக்கு மின் இணைப்பு.

*வினா எண் 143—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நெல்லை மாவட்டம், பொதிகை மலை ஆதிவாசிகளுக்கென கட்டப்பட்ட தண்ணீர் தொட்டிக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் தாமதமாகிறதா?

(ஆ) ஆம் எனில், என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) தண்ணீர் தொட்டிக்கு மின இணைபபு கோரி மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து 22-2-1979 அன்று மின் வாரியத்திற்கு மனு வந்தது. அதன் மீது மின்வாரியம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு தானியன் குடியிருப்பு ஊராட்சித் தலைவரை மின் வாரியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் அவர் ஒப்பந்தம் செய்துகொண்டார். இவ்வாண்டு நவம்பர் மாத இறுதிக்குள் இணைப்பு வழங்க மின் வாரியம் திட்டமிட்டுள்ளது.